**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்.**

**முன்னிலை: திரு.வீ.காளிதாசன், பி.காம்.,எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்.**

**2026 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 09–ஆம், நாள் வியாழக்கிழமை**

**இடைநிலை மனு எண்.7/2026**
**இன்**
**அசல் வழக்கு எண்.240/2010**

ஆறுச்சாமி ... மனுதாரர்/2 ம் பிரதிவாதி

/எதிர்/

செல்வராஜ் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இறுதியாக 09.04.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.கண்ணன், B.Com.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ராஜேஷ், B.Lit.,B.L., அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுவில் கண்டுள்ள விபரப்படி கடந்த 05.04.2011 தேதியில் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒரு தலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று மனுதாரர் தரப்பில் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–**

மேற்படி அசல் வழக்கினை எதிர்மனுதாரர்/வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1, 2 பிரதிவாதிகள்

வழக்கறிஞர் திரு.எம்.பொன்னுச்சாமி,B.A.,B.L., அவர்களை பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞராக நியமித்துள்ளனர். மேற்படி வழக்கறிஞர் திரு.எம்.பொன்னுச்சாமி,B.A.,B.L., அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகி அசல் வழக்கு எண்.240/2010-ல் 1, 2 பிரதிவாதிகளின் சார்பாக வாக்காலத்து தாக்கல் செய்துள்ளார். மேலும் அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய தேவையான அனைத்து ஆவணங்களின் நகல்களையும், 1, 2 பிரதிவாதிகள் அவர்களின் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்று மேற்படி வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கறிஞரும் ஒப்புக்கொண்டுள்ளார். மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையாக உரிய கட்டணத்தையும் வழக்கறிஞரிடம் செலுத்தியுள்ளார்கள். இந்நிலையில் மேற்படி அசல் வழக்கானது கடந்த 05.03.2011-ம் தேதியன்று 1, 2 பிரதிவாதிகளின் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி வாய்தா தேதியன்று பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையினை அவர்களது வழக்கறிஞர் தாக்கல் செய்யாத காரணத்தினால் நீதிமன்றத்தில் 1, 2 பிரதிவாதிகளை அழைத்தும், அவர்களுக்கு அவர்களது வழக்கறிஞர் எவ்வித தகவலும் சொல்லாத காரணத்தினால் பிரதிவாதிகளும் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகாத காரணத்தினால் பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு தலை பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு தலைபட்சமாய் பிறப்பிக்கப்பட்ட உத்திரவு அவர்களது வழக்கறிஞர் நீதிமன்றத்தில் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒரு தலைபட்ச உத்திரவினை ரத்து செய்ய நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. மேலும் பிரதிவாதிகளுக்கும் இது தொடர்பாக எவ்வித தகவலும் தெரிவிக்காத காரணத்தினால் பிரதிவாதிகளும் மேற்படி நீதிமன்ற உத்திரவினை ரத்து செய்ய முடியவில்லை. இந்நிலையில் பிரதிவாதிகளின் வழக்கறிஞர் அசல் வழக்கில் மேற்படி ஒரு

தலைபட்ச உத்திரவினை ரத்து செய்ய எவ்வித முயற்சியும் எடுக்காத காரணத்தினால் கடந்த 19.03.2011ம் தேதியன்று இம்மாண்புமிகு நீதிமன்றம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மட்டும் சான்றாவணங்கள் குறீயீடு செய்யப்பட்டு அசல் வழக்கில் முதல் நிலைத்தீர்ப்பானை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நீதிமன்றம் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட முதல்நிலை தீர்ப்பாணை தொடர்பாக அவர்களது வழக்கறிஞர் 1, 2 பிரதிவாதிகளுக்கு எவ்வித தகவலும் தெரிவிக்கவில்லை. மேலும் அசல் வழக்கின் நிலைமை குறித்து தொடர்ந்து 1, 2 பிரதிவாதிகள் அவர்களது வழக்கறிஞரை தொடர்பு கொண்டு கேட்ட போது, ஒவ்வொரு முறையும் வழக்கு தொடர்பாக ஏதாவது ஒரு தேதியை தருவார். 1, 2 பிரதிவாதிகள் படிக்காதவர்கள் என்பதாலும், சட்ட அறிவு இல்லாத நிலையில் அவர்களது வழக்கறிஞரை முழுமையாக நம்பியுள்ளனர். ஆனால் பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு தலை பட்சமாய் முதல் நிலைத் தீர்ப்பாணை இம்மாண்புமிகு நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட தகவல் தெரிந்திருந்தும், 1, 2 பிரதிவாதிகளுக்கு எவ்வித தகவலும் தெரிவிக்காமல் விட்டுவிட்டார். மேற்படி ஒரு தலைபட்சமாய் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையினை ரத்து செய்யவும், 1, 2 பிரதிவாதிகளுக்கு இது தொடர்பாக தகவல் கொடுத்து ரத்து செய்ய எவ்வித முயற்சியும் வழக்கறிஞர் எடுக்காத காரணத்தினால் எதிர்மனுதாரர்/வாதி இறுதிநிலை தீர்ப்பாணைக்காக இம்மாண்புமிகு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனு இ.ம.எண்.335/2013– ம் எண்ணாக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 1, 2 பிரதிவாதிகளுக்கு இம்மாண்புமிகு நீதிமன்றத்திலிருந்து அறிவிக்கை அனுப்பபட்டது. அந்த அறிவிக்கையினை 2ம் பிரதிவாதி 20.04.2013–ம் தேதியன்று பெற்றுக்கொண்டு வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளார். மேலும் அவர் படிக்காதவர் என்ற காரணத்தினால் இந்த அறிவிக்கை தொடர்பாக வழக்கறிஞரிடம் கேட்ட போது இது தொடர்பாக கவலைபட வேண்டியது இல்லை என்றும், நான் தொடர்ந்து வழக்கினை பார்த்துக்கொள்வதால் எவ்வித

பிரச்சினையும் இல்லை என்று கூறி வக்காலத்தில் கையெப்பம் மட்டும் பெற்றுக்கொண்டார். அப்போதும் மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் ஒரு தலைபட்சமாய் முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதை அவரது வழக்கறிஞர் தெரிவிக்கவில்லை. மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணை மனுவிலும் அவரது வழக்கறிஞர் அவர் சார்பாக ஆஜராகாத நிலையில் 21.06.2013-ம் தேதியன்று மேற்படி மனுவிலும் மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு எதிராக ஒரு தலை பட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் 1ம் பிரதிவாதி அவரது தரப்பில் வேறு வழக்கறிஞரை நியமித்துக்கொண்டார். ஆனால் மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் அவருக்கு எவ்வித தகவலும் கொடுக்கவில்லை. இந்நிலையில் கடந்த 16.02.2026 ஆம் தேதி வழக்கு விசாரணை நடைபெறுவதாகவும் ஆனால் மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் அவரது வழக்கறிஞர் ஆஜராகவில்லை என 1 ஆம் பிரதிவாதி கூறியதை கேட்டபோது, அதிர்ச்சி அடைந்த மனுதாரர்/2ம் பிரதிவாதி இது தொடர்பாக அவரது வழக்கறிஞரை தொடர்பு கொள்ள முடியவில்லை. மேலும் வழக்கு தொடர்பான ஆவணங்களும் இல்லை. இதனால் மனுதாரர்/2ம் பிரதிவாதி வேறு வழியின்றி 1ம் பிரதிவாதியின் வழக்கறிஞரை தொடர்பு கொண்டு கடந்த 26.02.2026 ஆம் தேதி வழக்கு தொடர்பான விவரங்களை சொல்லி இந்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்பான கோப்புகளை ஆய்வு செய்யும் போது கடந்த 05.03.2011-ம் தேதியன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு எதிராக ஒரு தலைபட்சமாய் உத்திரவும், 19.03.2011-ம் தேதியன்று முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பித்த ஒரு தலை பட்ச உத்திரவினை ரத்து செய்ய தாக்கல் செய்யும் இம்மனுவினை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு

மிகப்பெரிய இழப்பு ஏற்படும் என்பதே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கமாகும்.

**<u>2. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>**

இந்த மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. வழக்கினை எதிர்மனுதாரர்/வாதி மனுதாரருக்கு எதிராகவும், பிற பிரதிவாதிகளுக்கு எதிராகவும் பொய்யான சங்கதிகளுடன் அடங்கிய வாதுரையுடன் அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என தெரிவித்துள்ள சங்கதிகள் உண்மையல்ல. மனுதாரருக்கு, 1ம் பிரதிவாதி உடன் பிறந்த சகோதரர் ஆவார் என்றும், மனுதாரர் மற்றும் அவரது சகோதரர் ஒரே முகவரியில் தான் வசித்து வருவதாகவும், மனுதாரருக்கு மேற்படி அசல் வழக்கினை பற்றி அனைத்து விபரங்களும் நன்கு தெரியும் என்றும், மனுதாரர் இந்த பிரமாண வாக்குமூலத்தில் கூறியது போல் அவரது வழக்கறிஞர் மேற்படி அசல் வழக்கை பற்றி எந்த தகவலும் தெரிவிக்கவில்லை என்றால் மனுதாரர் அவரது வழக்கறிஞர் மீது சட்டப்படி நடவடிக்கையோ அல்லது அவரது வழக்கறிஞருக்கு ஒரு அறிவிப்போ அனுப்பி அவர் மீது பார் கவுன்சிலில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுத்திருப்பார் எனவும், மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள காரணங்களை நிரூபணம் செய்வதற்கு எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை, மேலும் 15 ஆண்டுகள் கழித்து வேண்டுமென்றே இந்த வழக்கை காலதாமதம் செய்வதற்காகவே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த தாவாவில் வாதி மற்றும் வாதி தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்களால் விசாரணையும் செய்து முடித்து வைக்கப்பட்டு விட்டதாகவும், இந்நிலையில் விட்டுப்போன சங்கதிகளை நிரப்புவதற்காக 1–ஆம் பிரதிவாதி அவரது வழக்கறிஞர் மூலம் இந்த மனுதாரரின் பெயரில் இந்த மனுவினை தாக்கல் செய்து விட்டுப்போன சங்கதிகளை நிரூபிக்க

முயற்சி செய்வதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்பதே எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கமாகும்.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**<u>4. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை :–</u>**

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**<u>5. தீர்வு:–</u>**

இருதரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கின் ஆவணங்கள் ஆகியவற்றை கவனமாக பரிசீலனை செய்ததில், அசல் வழக்கு எண்.240/2010 வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவானது உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை IX விதி 7 ன் படி மனுவில் கண்டுள்ள விபரப்படி கடந்த 05.04.2011 தேதியில் மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒரு தலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) மனுதாரர் தரப்பில் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதற்கு சொல்லியுள்ள முக்கியமான காரணம் மேற்படி அசல் வழக்கு எண்.240/2010 வழக்கில் மனுதாரர் மற்றும் 1ம் பிரதிவாதி இருவரும் வழக்கறிஞர் திரு.பொன்னுச்சாமியை நியமித்து வழக்கு நடத்தி வந்ததாகவும், மேற்படி வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு உரிய தகவல்களையும்

இருவரும் அளித்தும், அவர் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்ததால் இருவருக்கும் எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், ஒரு தலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தகவலையும் வழக்கறிஞர் திரு.பொன்னுச்சாமி அவர்கள் தெரிவிக்காமல் இருந்ததால் ஒரு தலைபட்ச உத்தரவை ரத்து செய்ய மனு தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், வழக்கின் 1ம் பிரதிவாதி வழக்கினை பற்றி கடந்த 16.02.2020 தேதியில் சொன்ன போது தான் தெரியவந்ததாகவும், அதன்பின்னிட்டு 1ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் மூலம் வழக்கில் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பின்னிட்டு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விவரம் உள்ளிட்டவற்றை தெரிந்துகொண்டதாகவும், எனவே, மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்துசெய்ய வேண்டுமென்பதேயாகும்.

7) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் முன்னிலையான வழக்கறிஞர், மனுதாரர் மற்றும் 1ம் பிரதிவாதி இருவரும் சகோதரர்கள் என்றும், அவர்கள் இருவரும் ஒரே முகவரியில் தான் வசித்து வருகிறார்கள் என்றும், எனவே, தற்போது தான் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பித்த விவரம் தெரியவந்தது என்று சொல்வது நம்பும்படியாக இல்லை. மேலும், மனுதாரரின் முந்தைய வழக்கறிஞர் திரு.பொன்னுச்சாமி மனுதாரருக்கு வழக்கு பற்றிய தகவல் எதுவும் அளிக்காமல் இருந்ததிருந்தால், இது சம்பந்தமாக அவருக்கு அறிவிப்போ அல்லது அவருக்கு எதிராக பார் கவுன்சிலில் புகாரோ அனுப்பியிருப்பார். மனுதாரர் மேற்படி காரணங்களை இந்த மனுவிற்காக தான் பொய்யாக சொல்லியுள்ளார். எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று வாதிட்டார்.

8) இருதரப்பு வாதுரைகள், மனுவின் சங்கதிகள், வழக்கின் ஆவணங்கள் ஆகியவற்றை கவனமாக பரிசீலனை செய்ததில், மனுதாரரும், அசல் வழக்கின்

1ம் பிரதிவாதியும் சகோதரர்கள் என்பதும், இருவரும் ஒரே முகவரியில் தான் வசித்து வருகிறார்கள் என்பதும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் மற்றும் அசல் வழக்கின் வழக்குரை ஆகியவற்றிலிருந்து தெளிவாக தெரியவருகின்றது. மனுதாரரும், 1ம் பிரதிவாதியும் முன்பு ஒரே வழக்கறிஞரை வைத்து முன்னிலையான போதும், அவர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை 1ம் பிரதிவாதி மட்டுமே வேறொரு வழக்கறிஞர் மூலம் மனு செய்து ரத்து செய்துள்ளார். மனுதாரரின் சகோதரரான 1ம் பிரதிவாதி அப்போதே மனு செய்து ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்த விவரமானது நிச்சயம் அதே வீட்டில் வசித்து வரும் மனுதாரருக்கு தெரியாமல் இருந்தது என்று சொல்வதற்கு நம்பும் படியாக இல்லை. மேலும், மனுதாரர் தனக்கு இறுதிநிலைத் தீர்ப்பாணை கோரிய மனுவில் அறிவிப்பு எதுவும் சார்பு செய்யப்படவில்லை என எதையும் தெரிவிக்கவும் இல்லை.

9) மனுதாரர் தரப்பில் அவரது முந்தைய வழக்கறிஞர் தகவல் தெரிவிக்காமல் இருந்ததாக சொல்லும் காரணமானது சட்டத்தின் பார்வையில் ஏற்புடையதல்ல. வழக்கின் தரப்பினர்கள் தான் தங்களுக்காக முன்னிலையாகும் வழக்கறிஞரை தொடர்பு கொண்டு வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்களையும், நடவடிக்கைகளையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். மாறாக வழக்கறிஞர் தகவல் தெரிவிக்கவில்லை என்று தனது வழக்கறிஞர் மீது பழி சுமத்துவது ஏற்புடையதல்ல என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் மற்றும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் பல வழக்குகளில் தெளிவுபடுத்தியுள்ளன. மனுதாரர் இந்த மனுவில் அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை 15 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்ததற்கு தெரிவித்துள்ள காரணங்களானது ஏற்புடையதாக இல்லையென்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. இருப்பினும், இந்த வழக்கின் தன்மை, வழக்கில் கோரியுள்ள பரிகாரமான பாகப்பிரிவினை

ஆகியவற்றின் அடிப்படையில் மனுதாரருக்கு தனது வழக்கை நடத்துவதற்கு ஒரு வாய்ப்பு வழங்கும் பொருட்டு நீதியின் நலன் கருதி இந்த மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. இருப்பினும் காலதாமதத்திற்கு மனுதாரர் ஈடு செய்வது அவசியமென்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**முடிவாக,**

இந்த மனு ரூ.3,000/– செலவுத்தொகையை மனுதாரர்/1ம் பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதிக்கு 20.04.2026 தேதிக்குள் செலுத்தவேண்டுமென்ற நிபந்தனையுடன் அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இந்த மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை செலுத்த அழைக்க 21.04.2026.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

(Sd/- V.Kalidasan)
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம்.**

**<u>பிற்சேர்க்கை:–</u>**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை
**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

(Sd/- V.Kalidasan)
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம்.**

<u>Draft/**Fair** Order</u>

**I.A.No.7/2026**
**in OS.No.240/2010**
**Dated: 09.04.2026**
**DMC, Palladam.**